பக்கங்கள் :எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 200

# தீர்வுக்கான அடிப்படை விடயங்கள்

# நாளைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்

## தீர்க்கமான இணக்கம் காணப்படாவிடில் முயற்சி குழம்பிப்போகலாம் என ஊகங்கள்

கொழும்பு, ஜூன் 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப் பட்ட யோசனைகளைத் தொகுத்து -

உத்தேச தீர்வின் அடிப்படை - பிரதான வடிவம்- எவ்வாறு அமைய வேண்டும் - என்பது குறித்து நாளை கூடும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும் - விரிவாக ஆராயப்படும் - என்று அறியவந்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 4 மணி நேரம் வாகனச் சோதனை

கொழும்பு,ஜூன் 17

கொழும்பு பெரும் நகரப் பகுதியில் நேற்று மாலை 3 மணி முதல் 7 மணிவரை பொலீஸாரும் படையினரும் இணைந்து பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நகரத்துக்குள் நுழையும் தெஹிவளை, களனி பாலங்களை அண்டிய பகுதிகளில் சகல வாகனங்களும் நிறுத்தப்பட்டு பெரும் எடுப்பில் சோதனையும் தேடுதலும் நடத்தப்பட்டன.

தேடுதலின்போது எந்தவித தடயங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலீஸார் பின்னர் தெரிவித்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை காரணமாக சிலமணி நேரம் நகரில் வாகன நெரிசல் நீடித்தது. (அ-1)

## வளலாயில் தரையிலும் கடலிலும் குண்டுச் சத்தங்கள்!

உடுப்பிட்டி,ஜூன் 17

பலாலி விமானத் தளத்தை அடுத்துள்ள வளலாய்ப் பகுதியில் நேற்றுமாலை 4.45 மணி முதல் ஒரு மணி நேரமாக பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டன. இதனால் வடமராட்சிப் பகுதியில் பதற்றம் நிலவியது.

குண்டுச்சத்தங்கள் ஒரே தொடர்ச்சியாகக் கேட்ட அதே வேளை கடலிலும் குண்டுகள் வீழ்ந்த பெரும் சத்தங்கள் கேட்டதாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

படையினரின் ஒத்திகை நடவடிக்கையா அல்லது சேதமடைந்த குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டனவா? என்பதை நேற்றிரவு உடனடியாக அறியமுடியவில்லை. (அ-1-155)

## மஹிந்தவுடனான பேச்சு பயனுள்ளதாக அமைந்தது

### எரிக் சொல்ஹெய்ம் சொல்கிறார்

லண்டன்,ஜூன் 17

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுக்கள் மிகவும் பயன் உள்ளதாக அமைந்ததாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார். ஆனால் இச்சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து விவரம் தெரிவிக்கவோ கருத்துக் கூறவோ அவர் மறுத்துவிட்டார்.

நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சமாதான அனுசரணையாளரான நோர்வே நாட்டின் சர்வதேச அபிவிருத்தி (08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆயுதம் வழங்கக் கூடாது புதுச்சேரியில் வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்

இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவதை மத்திய அரசு உடன் நிறுத்தவேண்டும் என்று கோரி புதுச்சேரி மாநிலத்தில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பெரியார் திராவிடக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில்,விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் தொண்டர்களும் பங்கேற்றனர்.

இலங்கை அரசுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆயுதங்கள் வழங்கக்கூடாது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். கிழக்குப் பாகிஸ்தானில் வங்காள மக்களுக்கு இந்தியா உதவியதுபோன்று இலங்கையில் தமிழ் மக்களுக்குத் இந்தியா உதவவேண்டும் என்றும் கோஷங்களை அவர்கள் எழுப்பினர். (அ-1-சி)

## நாகர்கோவில், பூநகரி முன்னரங்க நிலைகள் மீது வெள்ளி இரவு தொடக்கம் தொடர் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம்,ஜூன் 17

நாகர்கோயில், முகமாலை, பூநகரி ஆகிய முன்னரங்க நிலைகள் மீது நேற்றுச் சரமாரியான தொடர் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாகர்கோயில், முகமாலை முன்னரங்க நிலைகளுக்குள் இருவேறு சம்பவங்களின் போது விடுதலைப் புலிகள் ஊடுருவ முயன்றனர் என்றும்-

படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இரு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும்- பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

ஆனால் இது குறித்து புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

வெள்ளிக்கிழமை இரவும் நேற்றுப் பகல் முழுவதும் முன்னரங்க நிலைகள் மீதான படையினரின் ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்ததாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்று மாலை தொடக்கம் இரவு வரை வரணி முகாமில் இருந்து முகமாலையை நோக்கி தொடர்ச்சியாக இடைவிடாமல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (அ-1-155)

## 64 மாத காலத்தின் பின்னர் நேற்று குடாநாட்டு வானில் 'கிபிர்' விமானங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 17

சுமார் 64 மாத கால இடைவெளியின் பின்னர் நேற்று நண்பகல் இரு 'கிபிர்' விமானங்கள் இரண்டு தடவைகள் குடாநாட்டு வானில்நுழைந்து சுற்றிவட்டமிட்டன.

முதலில் நேற்று நண்பகல் 12 மணிக்கும் பின்னர் ஒரு மணிக்கும் வான்பரப்பில் நுழைந்த 'கிபிர்' விமானங்கள் ஒவ்வொரு தடவையிலும் இரண்டு முறைகள் சுற்றி வட்டமிட்டன. இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பெரிதாகப் பதற்றம் தோன்றவில்லை.

இதுவரை குண்டுவீச்சு விமானங்களின் எமகாதச் சத்தத்தைக் கேட்காத சிறுவர்களில் சிலர் அவற்றின் கொடூரம் புரியாமல் காதுகளைக் பொத்திக் கொண்டு மேலே பார்த்தனர் என்றும் -

இன்னும் சில சிறுவர்கள் குண்டுவீச்சு விமானங்களின் சத்தத்தைக் கேட்டு ஓடோடிச் சென்று தமது பெற்றோரையும் உறவினர்களையும் கட்டிப்பிடித்து அழுதனர் என்றும் - உதயனுக்குத் தெரிவித்தனர்.

3 வயதுக் குழந்தையின் பெற்றோர்கள் விமானச் சத்தம் கேட்டதும் அதனை அரவணைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே கூட்டிச் சென்றதை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

முந்திய அனுபவம் உடையவர்கள் உடனடியாகக் கிபிர் தாக்குதல் சூழ்நிலை தோற்றியிருக்க முடியாத எண்ணத்துடன் தமது அலுவல்களைப் பதற்றமின்றிச் செய்தனர். பலர் கிபிர் விமானங்கள் பறந்ததை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தனர்.

கிபிர் விமானங்கள் யாழ்.நகரின் கரையோரங்களில் குண்டுவீச்சு நடத்திவிட்டு மேலேழுந்த சமயம் பெரும் சத்தம் கேட்டது என்றும் சிலர் தெரிவித்தனர். ஆனால் அது அவர்களின் ஊகமாகவே அமைந்தது.

யாழ்.நகரத்தின் கடற்கரையோரப் பகுதியிலோ, பூநகரிப் பகுதியிலோ குண்டு வீச்சு ஏதும் இடம்பெறவில்லை என நேற்றிரவு அப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சமாதான காலத்தில் பல தடவைகள் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-1-68)

### பக்தர்கள் அரோஹரா கோஷம் எழுப்ப, அந்தணர்கள் பூமாரி பொழிய

## நயினை நாகபூஷணி ஆலயத்தில் நேற்று பக்திபூர்வமாக நடந்த கொடியேற்றம்

### சோதனைத் தாமதங்களால் பலர் தரிசிக்க முடியவில்லை

(நயினையிலிருந்து நம்பி)

நல்லூர்,ஜூன் 17

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது.

அங்கு கூடியிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் அந்தணர்கள் பூமாரிப் பொழிய நண்பகல் 12 மணிக்கு அன்னையின் கொடியேறியது.

காலையில் ஆரம்பமான விசேட பூசைகள், வசந்தமண்டபப் பூசைகள் நிறைவேற்றப்பட்டு கொடியேற்றம் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வழமை போல் பெரும் எண்ணிக்கையானவர்கள் சமுகமளிக்காத போதும், தீவகம் வாழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொடியேற்றத்திருவிழாவுக்கு வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவுத் துறைமுகம் வரை ஐந்து சோதனை நிலையங்களிலும் சோதனைகள் தீவிரமாக இருக்கும் என வெளிவந்த தகவல்களைத் தொடர்ந்தே வழமையிலும் பார்க்க குறைவான பக்தர்கள் வருகை தந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பண்ணையிலும், குறிகாட்டுவான், நயினாதீவு துறைமுகங்களிலுமே மக்கள் நீண்டநேரம் தாமதத்திற்கு ஆளாகினர்.

இதேவேளை, நயினாதீவு துறைமுகத்தில் கடுமையான சோதனைகள் இடம்பெற்றதால் கொடியேற்றத்தைக் காண்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பக்தர்களில் பெரும்பாலானோர் கொடியேற்றத்தைத் தரிசிக்க முடியவில்லை.

சோதனைகள் பூர்த்தியாகி முடியாத நிலையில், கொடியேற்றம் நிறைவுபெற்று நீண்டநேரத்திற்குப் பின்னரும் நயினாதீவு துறைமுகத்தில் சோதனைக்காக காத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (அ-1)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நேற்று நடந்த கொடியேற்ற உற்சவத்தில் கலந்துகொண்ட பக்தர்களின் ஒரு பகுதியினரையும், பிரதமகுரு கொடியேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : நம்பி)



## சந்திரிகாவின் மகளின் திருமணத்தில் மங்கள

லண்டன்,ஜூன் 17

லண்டனில் நேற்றுமுன்தினம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகள் யசோதராவின் திருமணம் நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்ட மங்கள சமரவீரவும் இத்திருமண வைபவத்தில் கலந்துகொண்டார்.

அத்துடன் சந்திரிகாவின் சகோதரரும் அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்காவும் சகோதரி சுனித்திராவும் மற்றும் இரு வர்த்தகர்களும் இலங்கையில் இருந்து திருமணத்துக்கு சென்றிருந்தனர். (அ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் [illegible] தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## உலகநாதன் கந்தசாமி பத்தர்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வடமேற்கு, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்தவரும் தற்போது London Kings Bury இல் வசித்து வந்தவருமான உலகநாதன் கந்தசாமி பத்தர் (14-06-2007) வியாழக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவமனோகரன் (தேவன்) மற்றும் புஸ்பராணி, குமரகுருபரன் (சிவா), புஸ்பரதி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகாந்தன், நீறநசந்திரவதி, கண்ணதாசன் (கனடா), லோஜினி ஆகியோரின் அன்பு மாமனும் சாருகன், அனுஜன், வைஸ்ணவி, சினேகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-06-2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிதொடக்கம் 3.30 மணிவரை நடைபெற்று பூதவுடல் லண்டனில் உள்ள செல்ரன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குமரகுருபரன் (மகன்-சிவா),
கிருபாகரன் (மகன்).
தொடர்பு இல.:- 02082005939,
07985379176.

முகவரி:-
91,Boy Groft Avunue,
Kings Bury,
London Nw 9 8 AL.

(C/52683)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் பிரார்த்தனையும்



அமரர்
## பொ.முத்துக்குமாரசாமி

மலர்வு
05.07.1916

உதிர்வு
18.05.2007

18.05.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் 17.05.2007 (ஞாயிற்றுக்கிழமை) இன்று 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பத்தின ரோடு வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு - கைதடி

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## தம்பையா இளையதம்பி

(சரசாலை வடக்கு)



தோற்றம்
24-03-1925

மறைவு
02-07-2003

திதி: பூர்வபக்க திருதியை
(03-06-2007)

அகில மதில் நாமுயர வழிகள் செய்தீரே
மேதினியில் நாம் வாழ வளம்பல சேர்த்தீரே
எமது நல் வாழ்விற்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வமே! ஆண்டுகள் நான்காயினும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டகலாது.

82/4, மெற்றோ தொடர்மாடி,
55 ஆவது ஒழுங்கை,
கொழும்பு -06.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/52686)

### வலி.தென்மேற்கில் மாதாந்தக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவைப் பெற்று வருபவர்களுக்கு இம் மாதத்திற்கான கொடுப்பனவு கடந்த வெள்ளிக்கிழமை முதல் தபாலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.(1-135)

### வீடு வாடகைக்கு

நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0713106279

(61744)

### தவறிவிட்டது

இன்னாவத்தை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தில்லைநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (682510862 V), சாரதி அ.பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை யாழ்ப்பாணத்தில் இருந்து திருநெல்வேலிக்கு பஸ்ஸில் பயணம் செய்தவேளையில் தவறிவிட்டது. தயவு செய்து ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்புகொள்ளவும்.
T.P.:0776103213,
ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி.

(61743)


# யாவருக்கும் கணினி

One Step Ahead Proudly Introducing First Time **Core 2 Duo** Buy from an Intel® Authorized Distributor

**UNISTA**
Intel 2.6 LGA Processor
Intel Core 2 duo Processor Support Mother Board
256 Mb DDR1/2 Ram
40 Gb Hard disk 7200RPM
ATX Case with 450/500W Smps
CDROM
15" Digital Color Monitor
Keyboard
Mouse
43,999

**UNIPRO**
Intel P4 3.0/2M cache LGA Processor
Intel Core 2 Duo processor support Mother Board
512 Mb DDR2 Ram
80 Gb Sata Hard disk 7200RPM 1.5/3.0 Gbps
ATX Case with 450/500W Smps
Combo DVD/CD-RW
15" Digital Color Monitor
Keyboard
Mouse
49,900

**UNICAP**
Intel P4 3.0/4M Dual Core LGA Processor
Intel Original Essential Series Mother Board
1 Gb DDR2 Ram
160 Gb Sata Hard disk 7200RPM 1.5/3.0 Gbps
DVD-RW / ANALOG VIDEO INTERFACE
ATX Case with 500W Smps
15" Digital LCD Monitor
A4 Tech / MultiMedia Keyboard
A4 Tech Mini Optical Mouse
A4 Tech Bass Speaker
DV3 Video Capture Interface Card
97,500

**UNICLASSIC CAP**
Intel P4 Core 2 Duo LGA Processor
Intel Original Classic DV3 Series Mother Board
2 Gb DDR2 Ram
256 Mb PCI Express VGA
250 Gb Sata Hard disk 7200RPM 1.5/3.0 Gbps
Combo DVD/CD-RW
DVD-RW/ ANALOG VIDEO INTERFACE
ATX Long Tower Server Special Case with 500W Smps
17" Digital LCD Monitor
A4 Tech / MultiMedia Keyboard
A4 Tech Glaser Mouse
A4 Tech Bass Speaker
Additional DV3 Capture Interface with 3 more DV3 Port
149,500

**MEGA OFFER PRICED** இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
Kingston DDR1 256 - 3500/- Combo 4500/- UPS 6500/-
Kingston DDR2 512 - 4000/- DVD RW 5750/- HP Scanner
Warranty 1 & 3 Years

உடனடி டெலிவரி அட்வான்ஸ் வாங்கிவிட்டு இழுத்தடித்தல் கிடையாது

ASUS Mother boards, Intel Original Mother Boards, AsRock LGA & 478 Mother Boards, All type of Intel Processors, Hard disks, Keyboards, Speakers Woofers, Printers, Scanners, Casings, Power Supplies and all etc available

Free Flash selected only

மற்றும் சலுகைகளுக்கும் தெரிவுகளுக்கும் நேரில்
எங்களுக்கு வேறு கிளைகள் யாழில் கிடையாது

UNI
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna



உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் உணவுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே.: 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
தொ.பே.7310

(61733)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 28 |
| ★ | ★ |
| 09 | 06 |
| ★ | ★ |
| 1970 | 2006 |

அமரர் **சிவனேசன்-ரகுராஜன்**

திதி : 17-06-2007

தாய்க்குத் தலைமகனாய் எம் குடும்பத்தின்
நல்விளக்காய்
குறையின்றி எமையெல்லாம் வாழவைத்த
அண்ணாவே !
எத்தனையோ உறவுகள் எமைச்சுற்றி
இருந்தபோதும்
"அண்ணா" என்றழைப் பதற்கோ உறவின்றித்
தவிக்கின்றோம்
எமைவிட்டுப் பிரிந்தின்று ஆண்டொன்று
ஆனாலும்
ஆறாது எம்துயர் அழியாது உங்கள் நினைவுகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

-குடும்பத்தினர்.

(61738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை அனைத்துலக சமூகம் சேர்ந்து தனிமைப்படுத்தக் கூடிய ஏது நிலை உருவாகிறது!

**இலங்கையில் உள்நாட்டு இனப் போர் தீவிரமடைந்து வரும் இச்சூழலில் அங்கு இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் காரணமாக அந்த நாட்டை சர்வதேச சமூகம் தனிமைப்படுத்தி ஒதுக்கிவிடும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.**

**இராஜதந்திரிகளையும் ஆய்வாளர்களையும் மேற்கோள்காட்டி இவ்வாறு எச்சரித்திருக்கின்றது 'ரொய்ட்டர்' செய்திச் சேவையின் ஆய்வு மதிப்பீடு.**

இலங்கையில் தமிழ்மக்கள் வெளியேற்றப்படுகின்றனர், கடத்தப்படுகின்றனர், படுகொலை செய்யப்படுகின்றனர். இச்சம்பவங்களுக்கு அரச படையினர் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் குற்றம் சாட்டப்படுகின்றது. அங்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், உதவி நிறுவனப் பணியாளர்கள் போன்றோர் தாங்கள் தமது பணிகளை மேற்கொள்ள முடியாது தடுக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் அதன் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இலங்கைக்கு அனைத்துலகத்தின் உதவிகள் தேவை. ஆனால், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் அதனை தனிமைப்படுத்தும் நிலைக்குத் தள்ளியுள்ளன என இராஜதந்திரிகளும் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவும் அமெரிக்காவும்மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி இந்த ஆண்டு இலங்கைக்கான சில உதவிகளை நிறுத்தியுள்ளன. இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக மீளக் குடியமர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக உணவு உதவிகளை உலக உணவுத் திட்டம் நிபந்தனையாக முன்வைத்துள்ளது.

இருந்தபோதும் பல தாக்குதல் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

**பிரிட்டிஷ் அமைச்சர் கூறியது**

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டியது மிக அவசியமானது என பிரித்தானியாவின் வெளி விவகார அமைச்சர் ஹிம் ஹவெல்ஸ் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

''ஸ்ரீலங்கா தனிமைப்படுத்தப்படக் கூடாது என்பதனையே நாம் எல்லோரும் விரும்புகின்றோம். கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் என்பன நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களை கொழும்பில் இருந்து அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட உத்திகள் போன்றவற்றை மீண்டும் பின்பற்றக்கூடாது.'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தங்குவதற்கு தகுந்த காரணங்களைக் கொண்டிருக்கவில்லை என குற்றம் சுமத்தி கடந்த வாரம் கொழும்பில் உள்ள 400 தமிழ் மக்களை அரசு வேறு பகுதிக்குப் பலவந்தமாக அனுப்பியிருந்தது. எனினும் உயர் நீதிமன்றத்தின் தடை உத்தரவு அதிகாரிகளை, தமது முடிவுகளை மாற்ற வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளியிருந்தது.

நூற்றுக்கணக்கான கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதற்கு இரு தரப்புகளும் ஒருவரை மற்றவர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

## கட்டுக்கடங்கா மனித உரிமை மீறல்கள் காரணம் என்கின்றனர் அவதானிகள்

இந்த அறிக்கைகள் போலியானவை எனவும் அவை அபகீர்த்தியை உண்டு பண்ணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை எனவும் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் அந்தச் சம்பவங்களுடன் படையினருக்கு உள்ள தொடர்பையும் அவர் மறுத்துள்ளார்.

**பயங்கரவாதத்தைக் கையாள்வதில் அரசு எல்லையைத் தாண்டியுள்ளது**

பயங்கரவாதத்தைக் கையாள்வது தொடர்பாக அனைத்துலக சமூகத்தின் எதிர்பார்ப்புகளில் இருந்து அரசு அதன் எல்லையை முற்று முழுதாகத் தாண்டி யுள்ளதாக தேசிய சமாதான சபையைச் சேர்ந்த ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அனைத்துலக சமூகத்தில் இருந்தும் உள் நாட்டிலும் அரசு சுயமாகவே தனிமைப்பட்டுள்ளது. எனினும், அனைத்துலக சமூகம் தன்னை வற்புறுத்துவதாக அரசு அதிருப்தியடைந்துள்ளது.

மனித உரிமைமீறல் தொடர்பில் மேற்குலக நாடுகள் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன எனவும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்கு தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றியது சிறந்த நடவடிக்கை எனவும் அரச தலைவரின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.சி. மற்றும் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனங்களுக்கு மிகவும் பலப்படுத்தப்பட்ட தனது அலுவலகத்தில் இருந்தவாறு நேர்காணல் வழங் கும்போது தெரிவித்துள்ளார்.

''இது அனைத்துலக சமூகத்தின் பாரபட்சமானதும் வற்புறுத்தலுமான நடவடிக்கையாகும். பிரச்சினையை விளங்கிக்கொள்ளாது அவர்கள் எங்களை வற்புறுத்த முயற்சிக்கின்றனர். நாம் தனிமைப்படமாட்டோம். எமக்கு ஆதரவாக 'சார்க்' அமைப்பில் உள்ள ஆசிய நாடுகள் உள்ளன. பிரித்தானியா, மேற்குலக நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை தாம் விரும்பியவற்றைச் செய்யட்டும். நாம் அவர்களில் தங்கியிருக்கவில்லை. தூதரக அதிகாரிகள் தமது அரசுகளைத் தவறாக வழிநடத்துகின்றனர். அனைத்துலக ஊடகங்களும் பிரச்சினைக்கு ஒரு காரணம். அவர்கள் அரசுக்கு எதிரான செய்திகளைக் கொடுக்கிறார்கள். நாம் எங்களைத் தற்காத்துக்கொள்வோம். நீங்கள் நாட்டை ஆபத்தில் தள்ளமுடியாது. கிம் ஹவெல்ஸ் முற்றிலும் தவறான தகவல்களைக் கொண்டுள்ளார்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும், இந்த வாரம் அரசுக்கு மற்றுமொரு அதிர்ச்சி தரும் விடயம் நிகழ்ந்துள்ளது. மனித உரிமைமீறல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான அரசின் விசாரணைகள் அனைத்துலக தரத்தில் இடம்பெறவில்லை என அரச தலைவரினால் நியமிக்கப்பட்ட அனைத்துலக நிபுணர் குழுவினர் குற்றம்சுமத்தியுள்ளனர். கடந்த வருடத்தில் நடைபெற்ற வன்முறைகளில் மட்டும் 4,500 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்ரீலங்காவில் உள்ள அமைச்சர்களும் மூத்த அதிகாரிகளும் ஒருவருக்கு ஒருவர் முரணான தகவல்களை உள்ளூரிலும் அனைத்துலகத்திலும் தெரிவித்து வருவதனால் நாடு மேலும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. இதில் கடும்போக்கான அரசியல்கட்சிகள், பௌத்த மதகுருமார் போன்றவர்களும் அடக்கம் என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் இலங்கையைக் கைவிடவேண்டிய நிலையும் ஏற்படலாம் எனத் தனது பெயரைக் குறிப்பிடாத கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவில் தெரிவிக்கப்படும் பல முரணான கருத்துகளினால் நாட்டின் வெளிவிவகார கொள்கையில் முற்றிலும் தெளிவற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் தொடர்ச்சியாக ஒருவருக்கு ஒருவர் முரணான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். உள்ளூரில் ஒரு செய்தியும் அனைத்துலகத்திற்கு பிறிதொரு செய்தியும் தெரிவித்து வருவது ஆபத்தானது. அதுவே அவர்களைத் தனிமைப்படுத்தும்.

**ரஜனி ரசிகர் பட்டாளம்!**

தமிழ் சினிமா ரசிகர்களின் தீவிர எதிர்பார்ப்புக்குப் பின்னர் ரஜினிகாந்தின் 'சிவாஜி' திரைப்படம் கொழும்பில் வெள்ளியன்று திரையரங்குகளில் காட்சிக்கு வந்தது. மருதானையில் 'சினிசிட்டி' திரையரங்குக்கு வெளியே 'சிவாஜி' படத்துக்கு டிக்கெட் பதிவுசெய்ய பெரும் ரசிகர் பட்டாளம் திரண்டிருந்தது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது.
(படம்:வரன்)



# பாடநூல் விடயத்தில் தமிழ் மாணவர்கள் மாற்றான்தாய்ப் பிள்ளைகளே!

இவ்வருடத்திற்கான கல்வியாண்டு ஆரம்பித்து ஐந்து மாதங்கள் நிறைவடைந்த நிலையில் மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் வந்துசேரவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பின்னடைவு ஏற்படவுள்ளது.

வருடாந்தம் நவம்பர் மாதத்தில் பாடநூல்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவேண்டுமென அரசு அறிவிக்கின்றபோதிலும் தமிழ் மாணவர்களுக்கான பாடநூல்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு கல்வி அமைச்சினால் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுவதில்லை என்பது பதிவாகி

## மத்தியில் மட்டுமல்ல பிரதேசத்திலும் அதிகாரிகளுக்கு அக்கறையில்லை

வருகிறது.

வருடாவருடம் மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்க ளின் விவரம் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற போதிலும் பலவருடங்களாக யாழ்.மாவட்ட மாணவர்களின் தேவைக்கேற்ப பாடநூல்கள் வந்து சேர்வதில்லை.

மாணவர்களுக்கான பாடநூல்கள், ஆசிரியர்களுக்கான கைநூல்கள் ஆகியவை உரிய காலத்தில் கிடைப்பதில்லை. இதனால் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்திற்க மைய பாடங்கள் போதிக்க முடிவ தில்லை. இதனைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது கல்வியாளர்கள் எவருக்கும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அக்கறை இல்லையென்றே கூறவேண்டும்.

**கடந்த காலத்திலும் இதே கதைதான்!**

இன்றைய காலகாட்டத்தில் பாடநூல்கள் யாழ். மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு கப்பல் வசதி கிடைக்கவில்லையென காரணங் கூறப்படுகிறது. ஆனால், 2002 தொடக்கம் 2006 வரை ஏ-9 வீதி போக்குவரத்து நடைபெற்ற வேளையில் பாடநூல்கள் மாணவர்களுக்கு ஒழுங்காகக் கிடைத்ததா என்பது கேள்விக்குரியதே.

யாழ். மாவட்ட மாணவர்க ளின் கல்வி நிலையைச் சீரழிக்க மத் திய, மாகாண கல்வி அமைச்சு களின் திட்டமிட்ட செயற்பாடுகளே பாடநூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படாததாகும். அதற்கு மாவட்ட கல்வி அதிகாரிகளும் உடந்தை யாகச் செயற்படுகின்றனர்.

**அதிகாரிகளின் அக்கறையின்மை**

மாணவர்களின் கல்வி நிலை யில் அக்கறை கல்வி அதிகாரிகளுக்கு இருப்பின் துரித நடவடிக்கை மேற் கொண்டு பாடநூல்கள் தருவிக்க முடியாதா? தமது பிள்ளைகள் படிப்பதற்குப் பாடநூல்கள் இல்லையென் றால்தானே பாடப்புத்தங்களை மாவட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு. கல்வி அதிகாரிகளின் பிள்ளை உயர்கல்வி கற்பதால் இடைநிலை பாடப்புத்தகங்கள் பற்றி ஏன் அக் கறைப்படுகிறார்கள்.

பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணக் கல்வி அமைச்சு, மத்திய கல்வி அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வி அமைப்புகள் உள்ளதால் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டுவதில் குறியாக உள்ளனரே தவிர மாகாணங்களின் கல்வி நிலையைப்பற்றிச்சிந்திப்பதாகத்தெரியவில்லை.

பாடசாலைகளில் எத்தனை மாணவர்கள் கற்கின்றனர், அவர்களது பாடத்திட்டத்திற்கமைய எவ்வளவு பாடப் புத்தகம் தேவையென கல்வி அதிகாரிகள் அறியமாட்டார்களா? மாணவர்களின் தொகைக் கேற்ப பாடநூல்களைக் கொண்டு வருவதில் உண்மையாக அக்கறை செலுத்தினால் சுமார் எண்பது வீதமான பாடநூல்கள் கொண்டு வர முடியாதா?

மாவட்டத்திற்கு அத்தியா வசியப் பொருள்கள் ஏற்றிவரும் கப்பல்களில் ஒன்றில் பாடநூல்கள் ஏற்றிவர முடியாதா? அல்லது கப்பல்களில் தொகுதி தொகுதிகளாக அனுப்பிவைக்க முடியாதா? மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறையிருந்தால் நிச்சயமாக இதனைச் செய்திருக்கமுடியும். எந்த வோர் அதிகாரியாவது முன் வந்து மாணவர்களின் கல்வி நிலை யைக் கருத்தில் கொண்டு பாடநூல்கள் தருவிக்க ஏற்பாடு செய்கிறார்களா? அல்லது அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் உதவிகளைக் கோரி பாடநூல்களைக் கொண்டுவர முயற்சித்தார்களா?

தமது பதவியுயர்வுகளையும் சம்பள அதிகரிப்புகளையும் எதிர்பார்த்து செய்கிறார்களே தவிர மாணவர்களின் கல்வி நிலையைச் சிந்திக்கும் அதிகாரிகள் யாராவது உள்ள னரா? பெயருக்காக தொலைபேசியில் உரையாடியதாகப் போலிக் காரணங்களைக் காட்டிப் பெற்றோர்களை ஏமாற்றும் அதிகாரிகளே இன்று நிறைய உள்ளனர்.

**புத்தகங்களை வெளியிட்டு வழங்குவதில் தாமதம்**

மாணவர்களுக்குப் புதிய பாடத் திட்ட அலகுகளை வருடா வருடம் கல்வி அமைச்சும் கல்வி மறுசீரமைப்பு அமைச்சும் வெளியிடுகின்றன. ஆனால், அதற்கான புத்தகங்களை வெளியிட்டு வழங்குவதில் தாமதம் காட்டுகின்றன. தமிழ் பாடப்புத் தகங்கள் வெளியீட்டுத் திணைக்கத்தினரும் தமிழ் மாணர்களின் நலனில் அக்கறை கொள்வதில்லை. பாட அலகுகள் தயாரிப்பதிலும் தனிப்பட்ட ஒரு சிலரின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு மாறுபட்ட விதத்தில் பாட நூல்களை வெளியிட்டு மாணவர்களைக் குழப்பும் வகையில்செயற்படுகின்றனர். இச்செயற்பாடுகளும் பல கல்வியாளர்களைத் திக்குமுக்காடச் செய்கின்றன. எந்தப் பாடப் புத்தகங்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பது என்ற குழப்பங்களும் புத்தகங்கள் மாவட்டத் திற்குக் கொண்டு வருவது தடை ஏற்படுகிறது.

**இதுவரை வந்தது**

2005ஆம் ஆண்டு தரம் ஏழு (07) வகுப்பில் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட தமிழ், கணிதம் ஆகிய பாடப்புத்தங்கள் இன்று வரை வந்துசேரவில்லை. 2005 ஆம் ஆண்டு தரம் 7 வகுப்புகளில் கற்ற மாணவர்கள் 2007ஆம் ஆண்டில் தரம் 9 வகுப்புகளில் கற்கின்ற போதிலும் தரம் 7, தரம் 8, தரம் 9 ஆகிய வகுப்புகளுக்குரிய தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் இல்லாத நிலையிலேயே கற்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் தரம் 11 வகுப்புகள் வரையும் தரம்10, தரம் 11 ஆகிய வகுப்புகளுக்குரிய தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப் படா விடின் 2009ஆம் ஆண்டு க.பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் மேற்படி பாடங்களில் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியுமா?

**பாடநூல்கள் இல்லை**

அடுத்து 2007ஆம் ஆண்டு தரம் 10 வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத் தில் 10 பாடங்கள் கற்க வேண்டிய நிலையில்

**மக்கள் மன்றம்**

இதுவரை வரலாறு, ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாட நூல்களே வழங்கப்பட்டுள்ளன. தமிழ், கணிதம் உட்பட ஏனைய ஏழு பாடங்களுக்குரிய பாடநூல்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை.

தரம்2 தொடக்கம் 13 வரை ஆகிய வகுப்புகளுக்குத் தேவையான 46 வகையான பாடநூல்கள் இதுவரை வந்துசேர வில்லையென பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வியாண்டின் இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் விநியோகிக்கப்படாததால் அவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படு கிறது.

மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு அனைத்து கல்வி அலுவலங்கள் முன்பாக போராட்டம் நடத்த வேண்டிய சந்தர்ப்பத்தினை கல்வி அதிகாரிகள் ஏற்படுத்தி வருகின்றனர்.

மாணர்வகளின் பாடநூல்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கான பாட அலகு கைநூல்களும் இன்றும் கொண்டு வரப்பட வில்லை. பாடநூல்களும் இல்லை வழிகாட்டல் கையேடுகளும் இல்லை. இந்நிலையில் தமிழ் மாணவர்களின் கல்வியை ஆண்டவன் தான் பாதுகாக்க வேண்டும்.

- புன்னியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN THE UK

## LONDON GUILDHALL COLLEGE

BBA, MBA, BSc, MSc, LLB, LLM, Higher Diploma, Diploma & Certificate Courses in Tourism, Business Administration, Computing

CONTACT:
Esther David, 0777 037291
0044 779 290 8308
e-mail: estherdavi@googlemail.com

Parakrama De Alwis At-at-Law & Solicitor,
282/23, Dam Street, Colombo-12.
Tel: 011 232 9142
e-mail: ampl@lawyer.com (C/52672)



# STUDY IN CHINA

## சீனாவில் உயர்கல்வி

**MBBS Degree (மருத்துவ பட்டப்படிப்பு)**

- Sichuan University (WHO - World Health Organization Approved)

இலங்கையில் இருந்து இரண்டாவது குழு மாணவர்கள்

**Engineering & Science Degrees**
**(பொறியியல் மற்றும் விஞ்ஞான பட்டப்படிப்பு)**

- Bachelor of Aeronautical Engineering
- Bachelor of Machatronics Engineering
- Bachelor of Electronics & Information Engineering
- Bachelor of Bioengineering
- Bachelor of Biotechnology
- Bachelor of Chemical Engineering & Technology

கல்லூரி கட்டணம்
ஆண்டொன்றுக்கு
**MBBS $ 3000,**
**Engineering $2000**

*All the programmes are taught in English. Next Intake September 2007*
எல்லா பட்டப்படிப்புகளும் ஆங்கில மொழிமூலம் அடுத்த கல்வியாண்டு செப்தம்பர் 2007ல் ஆரம்பம்

*Minimum A/L requirement : 3C's*
ஆகக்குறைந்த தகமை க.பொ.த (உ/த) : 3C's

OXFORD College of Business

*Educational Consultants :*
Colombo :
No. 320 1/1, Galle Road, Colombo 03.
Tel: 011 4-718711-712, 0773-612555
Jaffna Information Centre :
61, Convent Road, Jaffna.
Tel : 0776 541166
(C/52673)

E-mail : ocboxford@yahoo.com Web : oxfordcollegesrilanka.com

## வீடு வாடகைக்கு

கல்வியங்காடு, புலவனார் வீதியில் உள்ள நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

*தொடர்பு: 0776914152* (61689)

## விற்பனைக்கு

NPHO.... இலக்கம் கொண்ட LML Select II ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு: 197, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.No. 021-2225283 (61728)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

*நல்ல இன ஜேர்மன் செப்பேட், கறுப்புநிற பெண் நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.*

தொடர்பு: சீ.ஞானசேகர் (ஆண்டவர்),
சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. (61708)

## புறொயிலர் கோழி விற்பனைக்கு

உயிருடன் புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும்.

**கோல்டன் பாம்**
(61714) 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா பிரஜாவுரிமையுடைய 1973இல் பிறந்த உத்திரட்டாதி 3ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கு படித்த, மெல்லிய, சிவந்த 5 வயது குறைந்த மணமகள் தேவை. மணமகன் இலங்கை வருவார்.

*தொடர்புகளுக்கு:*
மே/உதயன் 2982 (61713)

## வகுப்புகள்

வீடுகளுக்குச் சென்று சிறப்பான முறையில் ஓகன், கிற்றார் கற்பித்து கொடுக்கப்படும்.

*தொடர்பு:* **ஜோ.வின்சன்**
121,முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(61184)

## நீரிழிவு நிவாரணி

[illegible] (Gymnema) [illegible]

**BIO TEC**

131/2, [illegible], திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 4590907
32/3, ரெயில்வே அவன்யூ, கொழும்பு 05.

**T.P. 0112 852269**
**Metro Pharmacy, Wellawatha.**
T.P.0114934536
(60897)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
03 - 07 - 1940

ஆண்டவன் அடியில்
28 - 06 - 2006

அமரர்

# செல்வத்துரை செல்வநாயகம்

(ஜே.பி.யூ.எம்)
(உயர்நீதிமன்றச் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

திதி: 17.06.2007

*குடும்பத்தின் குல விளக்காய்*
*கருணையின் இருப்பிடமாய்*
*பாசத்தின் பதிவிடமாய் வாழ்ந்த*
*எம் தெய்வமே - நீர்*
*எமைப் பிரிந்து ஆண்டொன்று*
*மறைந்தாலும்*
*ஆறிடுமோ எங்கள் உள்ளம்*

என்றும் உங்கள் நினைவாகவே உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்...

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

*இல.44, நந்தன கார்டின்ஸ்,*
*கொழும்பு - 04.* (சி-52627)

# UNIVERSITY of CAMBRIDGE

# ENGLISH COURSES

**உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்**

உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற.

**UNIVERSITY OF CAMBRIDGE** இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள்.

## CAMBRIDGE KEY ENGLISH TEST (KET)

*Ket is the First Level of Cambridge Exams in English besed on language used in real life situations and covers the four language skills Reading Writing Listening and Speaking.*

## CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)

- BRITISH COLLEGE OF ENGLISH இல் வகுப்புகள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஐந்து மாதங்கட்கு நடைபெறும்.
- டிசம்பர் 2007இல் பரீட்சைகள் கொழும்பில் BRITISH COUNCIL இல் நடைபெறும்.

## CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)

- இரு ஒரு மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி, உலகின் பெரும் பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கில தகுதிக்கு IELTS இற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISHCOLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். பரீட்சை டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இலிருந்து கிடைக்கப் பெறுவீர்கள்.
- Each examination covers the four main language skills: Listening, Speaking, Reading and Writing, Speaking பரீட்சையின் போது பரீட்சார்த்தி 30 நிமிடங்கட்கு ஆங்கிலேயர் களுடன் சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டும்.
- **டிசம்பர் 2006 இல் நடைபெற்ற PET பரீட்சையில் Miss.Rajini Manhaleswarasharma 85 புள்ளிகளுக்கு மேல் பெற்று Merit Pass PET பரீட்சையில் பெற்றுள்ளார்.**
- **டிசம்பர் மாதம் நடைபெற்ற FCE பரீட்சையில் யாழ்.பல்கலைக்கழக விவசாயப்பீடத்தைச் சேர்ந்த Mr.Reynold Edward 85 புள்ளிகளுக்கு மேல் பெற்று Grade A யில் சித்தியடைந்துள்ளார்.**
- நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள் வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள் பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாடநெறிகளும் British Council Colombo இன் நடைமுறை போன்றே.


**பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை ஆங்கில உயர்கல்வி பெற எமது கல்லூரியில் இன்றே சேருங்கள்.**

**புதிய வகுப்புக்கள் 02.07.2007 இல் ஆரம்பமாகின்றன**

# BRITISH COLLEGE OF ENGLISH

143,Adiyapatham Road, Thirunelvely. T.P:0779934783

# BE A DOCTOR




Recognized by WHO/GMC-UK/ SRI LANKA MEDICAL COUNCIL

**இன்றே பதிவுசெய்துகொள்ளுங்கள்! விரைவில் இணைந்துகொள்ளுங்கள்!**
அனுமதிகளுக்கு தொடர்புகொள்ளவும் - 0773017883

[illegible]

[illegible]

- PATHE ACADEMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாள்களுக்குள் கற்கை நெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன் வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்குசெய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக் கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள் விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தொழில் பார்த்தவாறே கற்றை நெறியை மேற்கொண்டு வருகின்றனர்.
- இலங்கையர்களான Vitebsk பிரதிநிதிகள் உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

PATHE ACADEMY மூலம் அனுமதிபெற்ற மாணவர்கள் விவரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தற்போது 0% வட்டி தவணைத் திட்டமானது பிரதான கிறெடிட் அட்டைகள் மூலமாக.**

**Transfer from other Universities**
**Apply before 20th August to Join September semester**

பொறியியல்/ தகவல்தொழில்நுட்பம்/ ஏனைய பாடநெறிகளும் கற்றுக்கொள்ள வாய்ப்பு
Belarus National Technical University

**PATHE ACADEMY**
வவுனியாவில் எமது பிரதிநிதி
டாக்டர் S.[illegible]
மெடிகிளினிக்
தொலைபேசி: 024 222 2582, 024 222 4126

PATHE ACADEMY - The Leader of Medical Education
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271. www.patheacademy.org
(C/52654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாடு அடுத்த ஆண்டு இறுதிக்குள் கண்ணிகளற்ற பிரதேசமாகிவிடும்...!

கடந்த கால யுத்தம் காரணமாக குடாநாட்டில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி மற்றும் மிதிவெடிகள் பெரும் எண்ணிக்கையானவர்களின் உயிர்களைக் காவு கொண்டன. பலரை ஊனமுற்றோர் ஆக்கின.

போரில் வெல்வதற்காக போரில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விதைத்துச் சென்ற கண்ணி மற்றும் மிதிவெடிகள் அப்பாவி மக்களின் உயிர்



மிதிவெடி இனங்காணப்பட்ட பிரதேசம்

களைக் குடித்து வந்துள்ளன.

இந்த நிலையைப் போக்க சர்வதேசம் கண்ணி

## ஹலோரஸ்ட் அதிகாரி நம்பிக்கை

வெடிகளை அகற்றுவதற்காகப் பெருமளவில் நிதி உதவிகளை இலங்கைக்கு வழங்கமுன்வந்தன.

இந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணியில் 'ஹலோரஸ்ட்' என்ற நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்றது.

கண்ணி அகற்றுவதற்கு சர்வதேச மட்டத்தில் அறிமுகம் செய்த புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் அந்நிறுவனம் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

அந்த நிறுவனத்தின் புதிய செயற்பாட்டு அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பதவியேற்றுள்ள ரொறி பொய்ஸ் வெளியிடும் கருத்துக்கள் குடாநாட்டின் மக்களை ஆறுதலடையச் செய்யும் என நம்பலாம்.

### அடுத்த வருட முடிவுக்குள்...

குடாநாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அடுத்த வருட முடிவுக்குள் முழுமையாக கண்ணிகள் அகற்றப்பட்டுவிடும் என்கிறார் அவர்.

அதன்பின் மக்கள் அச்சம் ஏதும் இன்றி நடமாட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிடுகிறார்.

குடாநாட்டில் கண்ணி அகற்றும் செயற்பாடுகள் குறித்து அவர் விவரிக்கையில் -

யாழ். மாவட்டத்தில் 79 கண்ணிகள் உள்ள பிரதேசங்கள் இதுவரை சுத்திகரிக்கப்பட்டுள்ளன. 25 லட்சத்து 59,124 சதுர மீற்றர் பிரதேசம் கண்ணிகள் அகற்றப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் இருந்து 300 முதல் 400 வரையில் கண்ணிகள் மீட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

படையினர் தந்த வரை படங்களின் அடிப்படையில் யாழ். செயலகத்தில் இயக்கும் கண்ணி வெடி செயற்பாட்டுப் பிரிவினரால் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் எமது பணி முன்னெடுக்கப்பட்டது.

### பயிற்றப்பட்ட உள்ளூர் பணியாளர்

220 பேர் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். உள்ளூரில் தெரிவு செய்யப்பட்ட இவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்கள் கண்ணி அகற்றும் தொழில் நுட்பத்தை விரைவாகப் பயின்று சிறப்பாகப் பணியை முன்னெடுத்துள்ளனர்.


மிதிவெடி அகற்றப்படும் பிரதேசம்

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், ஜப்பான் ஆகிய அரசுகள் வழங்கிய நன்கொடை நிதி மூலம் எமது பணியை முன்னெடுத்து வருகின்றோம்.

### எதிர்கொண்ட நெருக்கடிகள்

எமது நிறுவனம் பல்வேறு நெருக்கடிகளை யாழ்ப்பாணத்தில் எதிர்கொண்ட போதும் மக்களுக்கு உதவவேண்டும் என்ற இலக்குடன் செயற்பட்டு, பெரும்பணி ஒன்றை முடித்துள்ளோம்.

அடுத்த ஆண்டு முடிவதற்கும் குடாநாடு கண்ணிகள் அற்ற பிரதேச மாக இருக்கும் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் கண்ணி அகற்றும் பணியில் எமது அமைப்பு ஈடுபட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எமது நிறுவனத்துக்கு புறம்பாக டெனிஸ் கண்ணி அகற்றும் நிறுனமும் பணியாற்றுகிறது. அவர்களுக்கும் எமக்கும் இடையில் நல்ல ஒத்துழைப்பு நிலவு கின்றது.

இப்படி தனது பணியை விவரித்தார் ரொறி பொய்ஸ்.

இந்தப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கும் அமெரிக்காவின் நிறுவனமான 'த ஹம்ரி டம்ரி இன்ரிரியூட்' (The Humpty Dumpty Institute) இலங்கை பணிப்பாளர் ஜானி சமுவேலும் அவருடன் வந்திருந்தார்.

கண்ணி வெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாகி கண்ணிகள் அற்ற குடாநாட்டை அடுத்த வருடம் காணலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் காணக் கூடியதாய் இருந்தது.

**மிதி வெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்ட பிரதேசம்**

| மாவட்டம் | பிரதேசம் | இனங்காணப்பட்ட மிதிவெடி பிரதேசம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2, 559,124 | 79 |
| கிளிநொச்சி | 49, 352 | 9 |
| திருகோணமலை | 40, 499 | 4 |
| வவுனியா | 8,215 | 1 |
| **மொத்தம்** | **2, 657, 190** | **93** |

**மிதிவெடி பரிசோதனை செய்யப்பட்ட பிரதேசம்**

| பிரிவுகள் | பிரதேசம் அளவு | பிரதேச எண்ணிக்கை |
|---|---|---|
| அபாயப் பிரதேசம் | 4, 384,066 | 229 |
| கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள பிரதேசம் | 18, 105 450 | 132 |
| கண்ணிவெடி புதைக்கப்படாத பிரதேசம் | 1, 677, 233 | 58 |
| **மொத்தம்** | **24, 166, 749** | **419** |

சந்திப்பு: **கனியன்**

# சிக்குன்குனியா: வருமுன் தடுப்பதற்கு எல்லோரிடமும் விழிப்புணர்வு தேவை

**கடந்த வருடம் யாழ்ப்பாணத்தையும் தாக்கியது சிக்குன்குனியா. மக்களை வயது வேறுபாடு இன்றி வாட்டி வதைத்தது. மீண்டும் ஒருமுறை இங்கு வந்து விடக் கூடாது என்பதே எல்லோரது வேண்டுதலாகவும் இருந்தது.**

**ஆனால், நாம் சொல்லியா எல்லாம் நடக்கின்றது? இந்தியாவில், கேரள மாநிலத்தில் அந்நோய் வேகமாகப் பரவுவதாகச் செய்திகள் வந்த வண்ணமே உள்ளன.**

**அது இங்கு வருமுன் தடுப்பதற்கு வைத்தியசாலைகள் முதற்கொண்டு சகல தரப்பினரும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் இங்கு நடைமுறை ஒழுங்குரீதியாகத் தருகிறார்.**

இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சிக்குன்குனியா, டெங்குக் காய்ச்சல் நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. இந்நோய்கள் யாழ். மாவட்டத்திலும் பரவக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. கடந்த வருடம் யாழ். மாவட்டம் சிக்குன்குனியா நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

எனவே இந்நோய் இங்கு பரவாதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் முன்னெடுக்கின்றது. இதற்கு அனைத்துத் தரப்பினரதும் உதவி களையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

### தடுப்பு நடவடிக்கைகள்

★ காய்ச்சல் நோயாளர் பற்றிய தொடர் கண்காணிப்பு

1. ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வெளி நோயாளர் பிரிவு, உள்ளக விடுதிகளில் சிகிச்சை பெறும் அனைத்து காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை தினமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் வைத்தியசாலைகளில் இருந்துவரும் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை கண்காணிக்கப்படவேண்டும். ஏதாவது ஒரு வைத்தியசாலையில் திடீர் அதிகரிப்பு ஏற்படின் சுகாதார வைத்திய அதிகாரியும், அப்பகுதிக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் நேரடியாக வைத்தியசாலைக்கும், களத்திற்கும் சென்று காய்ச்சல் எவ்வகையானது என்பதை உறுதிப்படுத்துவதுடன் அதனை மேலும் பரவாது தடுக்க உடனடி நடவடிக்கை எடுத்தல்.

3. ஒவ்வொரு பொதுச் சுகாதாரப்பரிசோதகரும் தனது பகுதியில் உள்ள அரச, தனியார் வைத்தியசாலைகளுக்கு தினமும் சென்ற காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையிலும் சேகரிக்கப்படும் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை வாராந்தம் தொகுக்கப்பட்டு பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் ஏதாவது ஒரு பகுதியில் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால் உடனடியாகப் பிராந்திய தொற்றுநோய்த்தடுப்பு வைத்திய அதிகாரிக்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அறிவிக்கவேண்டும்.

★ பூச்சியியல் தொடர் கண்காணிப்பு

ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் தமது பிரிவில் நுளம்புகள் அதிகமாக பெருகும்வாய்ப்புள்ள இடங்களில் பூச்சியியல் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். இதற்கு பூச்சியியல் உதவியாளரின் உதவி தேவைப்படின் பிராந்திய மலேரியாத்தடை வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும். அவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளில் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் உடனடியாக அழிக்கப்படல் வேண்டும்.

★ நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல்

* வைத்தியசாலைகள்

அ. வைத்தியசாலைகளில் நுளம்புகள் பெருகக் கூடிய நீர் தேங்கி நிற்கும் இடங்கள் உடனடியாக அழிக்கவேண்டும்.

ஆ. திண்ம, திரவ கழிவுகள் கிரமமாக அகற்றப்படல் வேண்டும். வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் துப்புரவு செய்யவேண்டும்.

இ. வைத்தியசாலை சூழல் முழுவதும் சிரமதானம் மூலம் சுத்திகரிக்கப்படவேண்டும்.

ஈ. வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் ஒவ்வொருநோயளர்களுக்கும் நுளம்பு வலை வழங்கப்பட வேண்டும்.

* பாடசாலைகள்

அ. பாடசாலைகளில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் இளவயதினர் தினமும் ஒன்று கூடுவதால் ஒருவரில் இருந்து பலருக்கு இந்நோய் தொற்றுவதற்கான சூழலாக அமைகின்றது. எனவே ஒவ்வொரு பாடசாலைகளும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவேண்டும். நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் அழிக்கப்படல் வேண்டும்.

* உள்ளூராட்சி மன்றங்கள்

அ. உள்ளூராட்சி மன்றங்கள் சந்தை, கடைத் தொகுதிகள் போன்ற [illegible] இடங்களில் சேரும் திண்மக்கழிவுகளை கிரமமாகவும், உரிய முறையிலும் அப்புறப்படுத்த வேண்டும்.

ஆ. வடிகால்களில் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு தினமும் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

* கோயில்கள்

அ. கோயில்களில் நுளம்புகள் பெருகக்கூடியவாறு நீர் தேங்கி நிற்கும் இடங்கள் அழிக்கப்பட வேண்டும்.

ஆ. வெற்று இளநீர்க் கோம்பைகள் நான்கு துண்டுகளாக பிளக்கப்பட்டபின் அப்புறப்படுத் தப்பட வேண்டும்.

* பொது நிறுவனங்கள்

அரச அலுவலகங்கள் உட்பட சகல பொது நிறுவனங்களிலும் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் சிரமதானம் மூலம் அழிக்கப்பட வேண் டும்.

* தனியார் வீடுகள்

பொதுமக்கள் தத்தமது வீடுகளில் நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்

1. சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரிவுகளில் பொது மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**இடங்கள்:**

- பாடசாலைகள்
- தாய்சேய் நல சிகிச்சை நிலையங்கள்
- பொது நிறுவனங்கள்
- சனசமூக நிலையங்கள்
- கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

வீட்டுத் தரிசிப்புகளுக்குச் செல்லும்போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் வீட்டு சுற்றாடலை பார்வையிட்டு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே சிக்கன்குனியா நோயை யாழ். மாவட்டத்தில் பரவாது தடுக்கலாம். எனவே அனைவரும் ஒன்றுபட்டு இந்நோயை எமது மண்ணில் பரவாது தடுப்போம்.

*வந்த பின் தவிர்ப்பதை விட வருமுன் காப்போம்.*

*வைத்திய கலாநிதி* **ஆ. கேதீஸ்வரன்.**

## சிக்குன்குனியாவை கழுதைப்பால் கட்டுப்படுத்துமா? மறுக்கின்றனர் தமிழக மருத்துவர்கள்

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் ஆசிய பிராந்தியம் முழுவதையும் ஆட்டிப் படைத்த நோய் ஒன்று தான் சிக்குன்குனியா. அது இலங்கையையும் விட்டு வைக்க வில்லை.

சிறிது காலத்தின் பின் சிக்குன்குனியா ஓய்ந்தபோதும் அதன் தாக்கம் இன்னும் நீங்கவில்லை. மூட்டுவலியிலிருந்து பலர் இன்னும் மீளவில்லை.

இந்நிலையில் தமிழகத்தில் கேரள எல்லைப்புற மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, கோவை மாவட்டங்களில் அண்மையில் மீண்டும் சிக்குன்குனியா பரவியுள்ளது.

இதனையும் சிலர் தமது பொருளாதார வளத்தைப் பெருக்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். 'சிக்குன்குனியா நோய் வராமல் தடுக்க கழுதைப் பால் குடிக்கலையோ கழுதைப் பால்' என்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பலர் கூவியபடியே கழுதைகளுடன் பால் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், சிக்குன்குனியா நோயை கழுதைப் பால் தடுக்கும் என்பதற்கு அறிவியல் பூர்வ ஆதாரம் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆட்டுப்பால் போன்றுதான் கழுதைப்பாலும். இதில் கொழுப்பு, கல்சியம் உள்ளிட்ட [illegible]க்கும். இதைக் குடித்தால் சிக்குன்குனியா வராது என்று கூற முடியாது [illegible] மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆவது பிறந்த தின வாழ்த்து

**17-06-2007**



சாவகச்சேரி, மடத்தடியைச் சேர்ந்தவரும், அமெரிக்கா வோடன் பல்கலைக்கழக வணிகக் கல்வித்துறை மாணவனுமாகிய தர்மபாலன் கௌரிசங்கர் இன்று [17.06.2007] தனது 21 ஆவது பிறந்த தினத்தை அமெரிக்காவில் கொண்டாடுகிறார்.

இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம்வல்ல வெள்ளைமாவடிப்பிள்ளையார் அருள் புரிய வாழ்த்துகின்றோம்.

**தர்மபாலன் கௌரிசங்கர்**
(பழைய மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

த.தர்மபாலன்,
மடத்தடி,
சாவகச்சேரி. (சி/52647)

வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, நர்மதா, தர்மிகா (தங்கைகள்),
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## மருந்துப் பார்சல்

10.06.2007 திருகோணமலைச் சோதனை நிலையத்தில் மருந்துப் பார்சல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (61752)

## கார் விற்பனைக்கு

**3 Sri Morris 1000** கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**S.S.A.நாதன்,**
203, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2273 (61692)

## ST. PATRICK'S COLLEGE
**JAFFNA, SRI LANKA**

*PHONE: 021-2222388*

**Wanted Graduate Teachers for English, Commerce and Accounting**

Applications are called from Graduate Teachers to teach English from Grade 6 - 11 and Commerce & Accounts from Grade 10 to 13.

**Closing date: 21.06.2007**

(C/52677) **Rector.**

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் ஒப்பந்த அடிப்படையில் கிளைமுகாமையாளராகக் கடமையாற்றிய

**அப்புக்குட்டி இராசேந்திரம்**

அவர்கள் கடந்த 18.05.2007 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

[illegible] ர்கள், பணியாளர்கள்.
தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், கொடிகாமம். (சி/52663)

## இன்றுடிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (61623)

தொடர்பு: ரமணன்
சோமசுந்தரம் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, [illegible], யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117

## வீடு/பகுதி வீடு வாடகைக்கு

வீடு/பகுதி வீடு சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் வாடகைக்குண்டு.

தொடர்பு: C. இரத்தினம், புது இலக்கம் 33,
(61707) பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## திருமண சேவை

எம்மிடம் அரச உத்தியோகத்தில் பணிபுரிபவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் உண்டு.

வெளிநாட்டிற்குச் செல்ல விரும்பும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆண், பெண் தேவை.

**துர்க்கா திருமண சேவை,**
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (61730)

## சேவை அறிவித்தல்

1. அரைக்கும் ஆலை
   1. சுஅரிசி மா வறுத்தல் 15/=
   2. அனைத்து வகையான அரைத்தல் வேலைகள்
2. சுத்திகரிப்பு நிலையம்
   1. மோட்டார் சைக்கிள் 300/=

* மில் வேலையில் அனுபவமுள்ளவர் தேவை
சைக்கிள் திருத்தும் ஒட்டுவேலையில் அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு: **பிருந்தா மில்ஸ்**
இல.18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே: 5745

"காமாட்சி துணை"

## ஸ்கை புட்சிற்றி அன் சுப்பர் மாக்கட்

என்னும் ஸ்தாபனத்தை 01.06.2007 முதல் ஆரம்பித்துள்ளோம் என்று அன்பர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

எம்மிடம் பிறிமா ஐஸ்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு என்பதையும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

உரிமையாளர்
**யோ.கருணதாஸ்.**

இல.70, இராமநாதன் றோட்,
கலட்டி, யாழ்ப்பாணம்
T.P.: 0776623727.
(மிலேனியம் றெஸ்ரோறன்ட் அருகில்).
(61724)

## தவறிவிட்டது

15.06.2007 அன்று கப்பலில் இருந்து தெல்லிப்பழையில் பேருந்தில் இருந்து பொருள்கள் இறக்கும்போது கல்வியியற் கல்லூரி பட்டமளிப்பு சான்றிதழ், 4 சாறிகள், புகைப்படங்கள், காப்புறுதி, வரிப் பத்திரம் மற்றும் வேறு பொருள்கள் அடங்கியுள்ள ROYAL எனப் பெயரிட்ட சிறிய Briefcase தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**T.P.No.: 0779906843**
**சி.லோகநாதன்,**
அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாய். (61735)

## தொடரும் நினைவுகள்
## 5 ஆவது ஆண்டு



**மண்ணில்**
**12-09-1996**

**விண்ணில்**
**13-06-2002**

**சிவானந்தம் மதிமுகன்**
(தரம் 1, பலை மத்திய கல்லூரி மாணவன்)

திதி: திருதியை

*புதுக்குருத்தாய் புன்னகைத்த பூமுகனே*
*மதுக்கரத்தால் மனம் நனைத்தமதிமுகனே*
*மலையாய் வளர்ந்து மனதால் சிறந்து*
*கலையாய் உயர்ந்து எம்களிப்பால் நிமிர்ந்து*
*அன்னை அரவணைப்பாய் அப்பாவின் அருந்துணையாய்*
*தங்கைக்குதான் துணையாய் தம்பி எங்கள் தனித்துணையாய்...*
*கற்பனைகள் கருகிவிட காலங்கள் கரைந்துபட*
*கனவுகள் தொடருதய்யா நினைவுகள் நெருடுதய்யா*
*அழுகின்றோம் ஆண்டுகள் ஐந்தாய் அலைகின்றோம்*
*வீழுபனையாள் துணையோடு விடியலுக்காய் விழைகின்றோம்.*

"லிங்கநேய", எழுதுமட்டுவாழ்,
கு.சிவானந்தம் - [வான்].

பிரிவால்துயருறும்:-
அப்பா, அம்மா, தங்கை - (சாம்பவி). (61640)

## நெஞ்சை விட்டகலா
## ஆறாம் மாத நினைவஞ்சலி



மலர்வு
26 • 01 • 1947

உதிர்வு
22 • 12 • 2006

அரியாலையூர் நடிக கலாமணி
**வடிவேலு செல்வரத்தினம் (செல்வம்)**

*நாடக மேடையொன்று நாடியிவ்வுலகுதனில்*
*ஆடவே வந்துதித்த அப்பாவே மாமாவே*
*தாத்தாவே அப்பப்பாவே*
*நடிப்பினை முடித்துக்கொண்டு*
*ஆடவான் பாதம் சென்றீரே.*

உமது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கிறோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
17A, இராஜேஸ்வரி வீதி, அரியாலை. (61716)

## மரண அறிவித்தல்
## முருகேசு சிவபாலன்



190ஆம் கட்டை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவபாலன் 13.06.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - திருமதி சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் கணேஸ்வரி, விக்னேஸ்வரி, சந்திரசேகரம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தில்லைநாயகி (கனடா), சிவநாயகி, அருள்நாயகி(வவுனியா), கருணாகரன் (லண்டன்), காளிதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.06.2007) திங்கட்கிழமை கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சி.முருகேசு**
(தகப்பன்).

190ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி
T.P.: 0776728386, 0777238613 (61736)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**முருகேசு நாகராசா**
(லக்சுமி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர், இந்திய - இலங்கை பத்திரிகை முகவர் - நெல்லியடி)

தோற்றம்
07 ✱ 05 ✱ 1932

மறைவு
18 ✱ 05 ✱ 2007

18.05.2007 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இன்று (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. மேற்படி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நாளை (18.06.2007) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டிகரண நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமகள் சோதி வீதி,
கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி. (61688)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
## MAJ. GEN. DATO N.SELVARAJAH

*(இளைப்பாறிய இராணுவத் தளபதி, மலேசியா)*

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சொந்த இடமாகவும் கோலாலம்பூர், மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை செல்வராசா நேற்று (16.06.2007) சனிக்கிழமை மலேசியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (61734)

தகவல்:
**நா.சிவராசா (N.S).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சிங்களத்தின் தவறான பிரசாரத்துக்கு துணைபோகும் தமிழ், முஸ்லிம் கட்சிகள்

இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான பெரும்பான்மை பௌத்த, சிங்கள அதிகார வர்க்கத்தின் கெடுபிடி குரூர அடக்கு முறையாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இதற்காக சர்வதேச அரங்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது தென்னிலங்கை அரசு.

இந்தக் குற்றச்சாட்டில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கியிருக்கும் கொழும்பு, அதற்காக இப்போது பதவி ஆசைக்காகத் தன்னுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் - முஸ்லிம் கட்சிகளைத் தனக்கு சாட்சியாக அழைக்க விழைகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) ஆகிய தமிழ்க் கட்சிகளும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ), அமைச்சர் ரியாத் பதியுதினின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் ஆகிய முஸ்லிம் கட்சிகளும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் இடம் பெற்றிருக்கின்றன.

இந்தத் தமிழ் கட்சிகளில் இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் மலையகத் தமிழர்களின் கட்சிகள். ஈழத்தமிழரின் ஒரேயொரு கட்சிதான் ஜனாதிபதி மஹிந்தவின் அரசில் இடம்பெற்றுள்ளது. அது ஈ.பி.டி.பி. மட்டுமே. அது கூட நாடாளுமன்றில் உள்ள 24 தமிழ் எம்.பி.க்களில் ஆக ஒரேயொருவரை மட்டுமே கொண்ட கட்சி. ஏனைய 23 ஈழத்தமிழ் எம்.பிக்களும் எதிர்க் கட்சிகளின் தரப்பில்தான் இருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) ஆகிய நான்கு கட்சியினரும் தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் ஒன்றுபட்டு 22 எம்.பிக்களுடன் மஹிந்தவுக்கு எதிரணியில் உள்ளனர். மற்றொரு ஈழத் தமிழ் எம்.பியான தி.மகேஸ்வரன் ஐ.தே.கட்சியிலும், மேலக மக்கள் முன்னணியைச் சேர்ந்த தமிழ் எம்.பியான மனோ கணேசன் அக்கட்சியின் சார்பிலும் நாடாளுமன்றில் எதிரணியில் உள்ளனர்.

ஆக, ஈழத் தமிழர்களின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 23 எம்.பிக்கள் எதிரணியில் இருக்க ஒரேயொரு ஈழத்தமிழ் எம்.பியை மட்டும் அமைச்சர் பதவிகொடுத்துத் தமது அரசில் இணைத்து வைத்திருக்கும் ஜனாதிபதி மஹிந்தர், ஏதோ முழுத் தமிழர்களும் முஸ்லிம்களும் தம்முடன் உள்ளனர் என்பது போல சர்வதேச சமூகத்துக்குப் புதுக்கதை அவிழ்த்து விடுகின்றார்.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் உலகத்தொழிலாளர் சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, அந்த உரையிலேயே இவ்வாறு கயிறு அவிழ்த்து விட்டிருக்கிறார்.

*''இலங்கையின் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளில் ஒன்றைத் தவிர மிகுதி அனைத்தும் எனது அரசில் உள்ளன. இவ்வாறு பல்லின மக்களைக் கொண்டது எனது அரசு. இத்தகைய அரசு சிறுபான்மை மக்களைப் பாரபட்சமாக நடத்துமா? நடத்தவே நடத்தாது''* - என்று அங்கு முரசறைந்திருக்கிறார் ஜனாதிபதி.

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பதுபோல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நியாயம் பிளத்தலுக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் சாட்சியமாக வந்து அமைகின்றன.

ஜனாதிபதி கூறிய இந்த 'நியாயத்தில்' இரண்டு அம்சங்கள் நோக்கத்தக்கவை..

ஒன்று - ஈழத்தமிழரின் 24 எம்.பிக்களில் ஒரேயொரு எம்.பியை மட்டும் தம்முடன் வைத்துக் கொண்டு ஒரு தமிழ்க் கட்சியைத் தவிர மற்றெல்லாம் தம்முடனேயே உள்ளன என்று ஜனாதிபதி விதண்டாவாதம் புரிவது.

இரண்டாவது - தமிழர்களுக்கு எதிராகத் தான் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் மற்றும் கொடூரங்களை மூடி மறைத்துத் தன்னை நீதியாகச் செயற்படும் பல்லின அரசாக சர்வதேசத்துக்கு நிரூபிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு எடுக்கும் 'சுத்துமாத்து' நியாயங்களுக்கு அந்த அரசுடன் இணைந்துள்ள காரணத்துக்காக இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி மற்றும் முஸ்லிம் கட்சிகள் நேரடியாக உதவுகின்றன என்பது.

மலையக மக்களின் சுபீட்சத்துக்காக அரசில் இணைகிறோம் என்ற மலையகக் கட்சிகள் மலையக மக்களுக்கு குறிப்பிடத்தக்க எதையுமே பெற்றுக் கொடுக்கவில்லை. முஸ்லிம் கட்சிகளின் நிலையும்கூட இதுதான். இக் கட்சிகளின் எம்.பிக்கள் அமைச்சர்களாகித் தங்களை வளர்த்துக் கொண்டார்களே தவிர, தமது சமூகத்துக்கு காத்திரமான - ஆக்கபூர்வமான - விடயங்கள் எதையும் சாதிக்கவில்லை. அதேநேரம் ஈழத் தமிழர்களுக்குக் கொடூரம் புரியும் ஓர் அரசுக்கு முண்டு கொடுத்து, அந்த அரசு அப்படி ஈழத் தமிழர்களுக்குப் பாரபட்சம் ஏதும் காட்டவில்லை என்ற அப்பட்டமான பொய்ப் பிரசாரத்துக்கு இந்த எம்.பிக்கள் ஆதாரமாக - சான்றுகளாக - மாறியிருக்கின்றனர்.

இவ்வாறு ஈழத்தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிராகரித்து, அவர்களை அடக்கும் ஓர் அரசுக்கு அது தொடர்பான விவகாரத்தில் சர்வதேச நியாயப்படுத்தலுக்குத் துணைபோகின்றன, இந்த மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக போரியல் வெறி கொண்டலையும் தென்னிலங்கைச் சிங்கள அரசுக்கு முண்டு கொடுக்கும் இக்கட்சிகள் தமிழர்களுக்குச் செய்யும் இத் துரோகத்துக்கு என்ன பதில் கூறப் போகின்றன?

# நயினை ஆலயச் சூழலில் பக்தர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த ஏற்பாடு

நயினாதீவு,ஜூன்17

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ளவரும் பக்தர்கள் ஆலயச் சூழலில் நடமாடுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நாகபூஷணி அம்மன் அன்னதான மண்டபத்துக்கும் நாகவிகாரைக்கும் மட்டுமே பக்தர்கள் செல்லமுடியும். கடற்கரையோரங்களில் எவரும் நடமாடமுடியாது.

இவ்வாறான கண்டிப்பான உத்தரவை நயினாதீவு கடற்படை அதிகாரி ஆலய நிர்வாகத்துக்கு விடுத்துள்ளார்.

நயினாதீவு கடற்படை அதிகாரி, யாழ். பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோர் நேற்று ஆலயத்துக்கு வருகை தந்தனர்.

ஆலய நிர்வாகத்தினருடன் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்ந்தபோதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

### பண்ணை 7மணிக்குத் திறக்கப்படுவதால் பாதிப்பு

யாழ். பண்ணையில் உள்ள சோதனை நிலையம் காலை 7 மணிக்குத் திறக்கப்படுவதால் பக்தர்கள் 4 மணிநேரம் தாமதமாகவே ஆலயத்தை வந்தடைய முடிகின்றது. இதனால் அவர்களால் முக்கிய பூசைகளில் பங்குபற்றமுடியாத சூழல் உருவாகின்றது.

ஆகையால் காலை 6 மணிக்கு பண்ணை சோதனை நிலையத்தைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டும்' என்று ஆலய நிர்வாகத்தினர் கடற்படை அதிகாரியிடம் கோரினர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் ஏனைய சோதனை நிலையங்களிலும் தாமதங்களைத் தவிர்க்க ஏற்பாடு செய்வதாகவும் அவர் ஆலய நிர்வாகத்தினருக்கு உறுதியளித்தார்.

(அ-1-111)

# காந்தி பிறந்த ஒக்ரோபர் -2 சர்வதேச வன்முறையற்ற நாள்

## ஐ.நா.வில் நேற்றுப் பிரகடனம்



நியூயோர்க்,ஜூன்17

உலகில் வன்முறையை ஒழித்து அமைதியை நிலைநாட்ட மகாத்மா காந்தி அரும் பாடுபட்டதை கௌரவிக்கும் பொருட்டு அவர் பிறந்த தினமான ஒக்ரோபர் 2ஆம் திகதியை சர்வதேச வன்முறையற்ற தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

'அஹிம்சை தத்துவம் இன்றைய உலகுக்கும் பொருந்தும் என வலியுறுத்தி இந்தியா சார்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையில் மிகப் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் ஒக்ரோபர் இரண்டாம் திகதி சர்வதேச வன்முறையற்ற தினமாகக் கடைப்பிடிக்கப்படும். ஒவ்வோர் ஆண்டும் இத்தினத்தை அதே திகதியில் அனுசரிப்பதற்கு வகை செய்யும் விதத்தில் நேற்றையதினம் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

அஹிம்சை , பரந்த மனப்பான்மை, மனித உரிமை, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பது முக்கியம் என அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1-202)

# கருத்திட்ட, அபிவிருத்தி அலுவலர்களுக்கான தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன் 17

திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத் திறமை காண் தடைப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அலுவலர்கள் தமது 12ஆவது வருடாந்தச் சம்பள அளவுத் திட்டத்தையும் கருத்திட்ட அலுவலர்கள் தமது 7ஆவது வருடாந்த சம்பள அளவுத் திட்டத்தையும் அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்கள் ஊடாகப் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 07, பொலவத்தை, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் அடங்கிய வர்த்தமானியை 'உதயன்' அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(68-202)

# கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்17

முரளிதரனின் 'நுங்குவிழிகள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நெல்லியடி தடக்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை தெணியான் நிகழ்த்த முதற் பிரதியை கு.பாலகிருஷ்ணன் பெற்றுக் கொள்வார்.

(1-203)

# இணுவில், மருதனார்மடத்தில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூன்17

இணுவில் கிழக்கு மற்றும் மருதனார் மடத்தில் ஒரு பகுதி உள்ளிட்ட பிரதேசம் நேற்றுப் படையினரால் சுற்றிவளைக் கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

அதிகாலைவேளை, அப்பகுதியில் குவிக்கப்பட்ட படையினர் வீடு வீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வயோதிபர்கள், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இராமநாதன் கல்லூரிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டு அங்கு வைத்து சோதனை நடத்தியதோடு படையினர் அறிவுரையும் வழங்கினர்.

(அ-1-68)

# தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனம்; அடுத்த ஞாயிறன்று போட்டிப் பரீட்சை

கொழும்பு,ஜூன்17

தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் மற்றும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளையுடன் 011 - 2785230 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 011-2784 232 என்ற தொலைநகல் இலக்கத்துடனோ தொடர்புகொள்ளலாம் என்றும்-

பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்ஹ தெரிவித்தார்.

(அ-68-202)

# சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,ஜூன்17

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று காலை 7.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

(1-203-135)

* * *

பிரான்பற்று முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(1-203-135)

# நாளை

ஆனி - 04 திங்கட்கிழமை 18.06.2007

திதி : திருதியை காலை 06.08

நட்சத்திரம் : பூசம் முன்னிரவு 09.26

[illegible] : 11.53 - 01.23

[illegible] : 07.23 - 08.53

# மனிதாபிமானம் செத்துக் கொண்டிருக்கிறது!

வலி. மேற்கில் உள்ள பிரதேச வைத்தியசாலை ஒன்றில் குழந்தை பிரசவிப்பதற்காகச் சென்ற பொக்குளிப்பான் நோயினால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அந்த வைத்தியசாலையில் நேர்ந்த கதியும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும், மனிதாபிமானம் உள்ள எவர் மனதையும் கலங்கச் செய்வதாகும்.

மாகியப்பிட்டியைச் சேர்ந்த 8 மாதக் கர்ப்பிணியான அந்தப் பெண் சில நாள்களாகக் பொக்குளிப்பான் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த மே மாதம் ஒரு நாள் திடீரென அவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. இதனையடுத்து, பெண்ணின் கணவர் அவரை முச்சக்கர வண்டி ஒன்றில் குறித்த பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

அங்கு கடமையில் இருந்த வைத்தியர் பொக்குளிப்பான் நோயுடன் கர்ப்பிணிப் பெண்ணை வைத்தியசாலையில் அனுமதிக்க முடியாதென மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது. அங்கு கடமையில் இருந்த மருத்துவ மாதுவும் சம்பந்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணை அனுமதிக்க வேண்டாம் என்றும் அம்புலன்ஸ் வழங்க வேண்டாம் எனவும் கூறியிருக்கிறார்.

இதனை அடுத்து செய்வதறியாது நினைத்துப் பதற்றமுற்ற கணவர், மனைவியையும் கூட்டிக்கொண்டு வைத்தியசாலையை விட்டு முச்சக்கர வண்டியில் வெளியே போனார்! இது என் தலைவிதியா என்ற பெரும் நெருடல் அவர் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

வாகனம் சென்று கொண்டிருக்கையில் கர்ப்பிணிக்கு வயிற்றுவலி அதிகமாகி வாகனத்துக்குள்ளேயே குழந்தை பிறந்தது. பின்னர் வீடு சென்று அங்கு நின்றவர்களின் உதவியுடன் உரிய காரியங்களைச் செய்து விட்டு மீண்டும் குழந்தையும் தாயையும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டது. ஆயினும் குழந்தை அன்று இரவே இறந்து விட்டது.

குறித்த பிரதேச வைத்தியசாலையில் கடமையில் இருந்த மருத்துவரினதும், மருத்துவமாதுவினதும் அசமந்தப் போக்குமே தனது குழந்தை இறப்பதற்குக் காரணம் என்கிறார் அந்தக் குழந்தையின் தந்தை. சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் எடுத்து வைத்தியசாலையில் அனுமதித்து உரிய சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் குழந்தையின் உயிர்காப்பாற்றப்பட்டிருக்கும் என்று சொல்கிறார் அவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய மேலிடங்களுக்குப் பெண்ணின் கணவர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படி எத்தனையோ நிகழ்வுகள், சம்பவங்கள் - எமது பிரதேசத்தில்! வெளியே கூறினால் வீண் பிரச்சினை என்று கருதப்படுகிறது.

எங்கள் மத்தியில் மனிதாபிமானம் செத்துக் கொண்டிருக்கிறது! அதன் விளைவுகளையா நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்??

(அ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அமராவதி சிவராமன்

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமராவதி சிவராமன் 15.06.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செட்டியார் சோமசுந்தரம் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் சரோஜினி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராஜசிங்கம், ராகினி ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி சுகந்தினி-சுதர்சன், சிவபாலினி, விஷ்ணுதேவி, சயந்தன், சிவூான், சுறேன், பவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விசாலியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு கொத்துத் துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
திருமதி. இ.சறோஜினி
(மகள்).

## சரவணமுத்து முத்தையா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 12ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து முத்தையா நேற்று (16.06.2007) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரன், மகேந்திரன், மகேஸ்வரி, சுபேந்திரன், குகராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தகுமாரி, சோமகலா, பாலரெட்ணம், ரேணுகா, சந்திரா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (61756)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அருட்சகோதரி மார்சலீனா செல்லையா

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளவாலைத் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி மார்சலீனா செல்லையா நேற்று (16.06.2007) சனிக்கிழமை இறையடி சேர்ந்துள்ளார்.

அவரது நல்லடக்கம் நாளை (18.06.2007) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இளவாலை கன்னியர் இல்லத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியைத் தொடர்ந்து நடைபெறும்.

தகவல்:
அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ்
மாகாணத் தலைவி.

## பொன்னையா சுப்பையா



அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 05, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுப்பையா 15.06.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றஅன்னலட்சுமியின் அன்புக் கணவரும் பாலேந்திரன், பவானி, பாலேஸ்வரன், பாலினி, பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாகௌரி, சந்திரகுமார், விஜயராணி, காண்டீபன், தினேஸ் ஆகியோரின் அன்பு மாமனும் கிரிஷாளினி, மிதுரன், கிருஷாந்தன், மயூரன், றோசினி, தரணி, சிவானுஜா, சிவதர்சன், பிரிசியா ஆகியோரின் பேரனும் குகநேசன், சிவலோகநாதன், நாகலட்சுமி, காலஞ்சென்ற சத்தியசீலன், தியாகரதி, காலஞ்சென்ற சிவநேசன், இரத்தினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 11 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை. (61749)

தகவல்:
பாலேந்திரன்,
பாலேஸ்வரன் (ஈசன்)
(மகன்)

விசேட கருத்தரங்கு
வணிக்கல்வி
பகுதி 1 இற்கான
முழுமையான நடை
முறை விடயம்
நாளை 8.00 A.M.
Becon
By. S.யசோ
Note:
* வெளிமாணவர் பங்கு பற்றி பயன் பெறலாம்.
* கையேடுகள் இலவசம்

# தீர்வுக்கான அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு, சமஷ்டி சார்ந்த ஆட்சி அமைப்பு இந்த இரண்டில் எதனை அடிப்படையாகக் கொண்டு தீர்வை வரைவது?

மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்வா, மாவட்ட மட்டத்தில் அதிகாரப் பகிர்வா? -

வடக்கு, கிழக்கை தனித்தனியாகக் கொண்ட நிர்வாக முறையா அல்லது வடக்குக் கிழக்கு இணைந்த நிர்வாக முறையா?

இவற்றுள் எதனை அல்லது எவற்றைத் தேர்வு செய்து தீர்வுக்கான அடிப்படையை வகுப்பது, தொகுப்பது என்ற பெரிய சிக்கலான நிலையை அனைத் துக்கட்சிக் குழு எதிர்நோக்கியுள்ளது.

இந்தச் சிக்கலைப் போக்கி நடைமுறைச் சாத்தியமான உகந்த அடிப்படை உருவைத் தெரிவு செய்யும் பணியை அனைத்துக்கட்சிக்குழு நாளை ஆரம்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறுவடிவங்களிலான முரண்பட்ட யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளதால் தீர்வுக்கான அடிப்படை அம்சத்தைகண்டு பிடிப்பது அல்லது தொகுத்துக் கொள்வது இடியப்பச் சிக்கலை நீக்குவது போன்ற மிகக் கடினமான பணியாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அடிப்படை விடயத்தில் ஒரு முடிவுக்கு அல்லது இணக்கத்திற்கு வருவதற்கு நீண்ட காலஅவகாசம்தேவைப் படும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு தரப்பும் தத்தம் பக்கத்துக்கு இழுத்துக் கொண்டிருக்க இணக்கப்பாடு கண்டு உகந்த அடிப்படையைத் தீர்மானிப்பதில் பெரும் இழுபறி நிலை தோன்றும் எனவும் மற்றொரு கருத்து நிலவுகின்றது.

மேற்சொன்ன சிக்கல்களும், சிரமங்களும், கஷ்டங்களும் இருப்பதால் தீர்வுக்கான அடிப்படை உருவை இனங்காண்பது தோல்வி கண்டு போகலாம் என்றும்-

அத்தகைய கட்டத்தில் அரசியல் தீர்வு ஒன்றை வகுக்கும் அல்லது கண்டறியும் முயற்சி குழம்பிப் போகலாம் என்றும்-கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது.

(அ-1)

யாவருக்கும் கணினி
இன்ப அதிர்ச்சி
பக்கம்02பார்க்க
புதிய
P4 ரக கணினி
புதிய மொனிற்றருடன்
43,999/-

# மஹிந்தவுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்எரிக் சொல்ஹெய்ம் 20 நிமிட நேரம் இரகசியப் பேச்சு நடத்தியமை தெரிந்ததே.

எனினும் இலங்கை அமைச்சர்களின் பிரசன்னத்தில் நடத்திய பேச்சுக்கள் குறித்துப் பிரஸ்தாபிக்கையில் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சில் நல்ல ஒரு சூழ்நிலை ஏற்படும் என நம்புகிறேன்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை விடயம் குறித்தும் தற்போது நிலவுகின்ற அரசியல் நிலை குறித்தும் பேசினோம்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உயர் மட்டத் தொடர்பை சமாதான மத்தியஸ்தர்கள் என்ற வகையில் அவர்களுடன் தொடர்புகளைப் பேண வேண்டும்.

என்ன பேசினோம் என்பது குறித்த விடயங்களை நான் வெளியிட விரும்பவில்லை - என்றார்.

(அ-சி)

திறப்பு விழா
BIO TEC HEALTH CENTRE
SALES CENTRE
திகதி: நாளை 18.06.2007 திங்கட்கிழமை
நேரம்: காலை 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)
தொ.பே.:
4590907
4590912
181/12, பலாலி வீதி,
திருநெல்வேலி,
(தபால் பெட்டிச் சந்தி)

கொழும்பு மாநகரில் நம்பிக்கையான பாதுகாப்பு மிக்க தங்குமிட வசதிகட்கு மீண்டும் புதுப்பொழிவுடன் உங்களை வரவேற்கின்றது
தம்பி லொட்ஜ்,
177, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.
தொ.பே.: 0714353078, 011 2343126

KIT CARD
KIT AVAILABLE FOR SAME PRICE
100 ரூபா - 100 ரூபா மட்டும்
400 ரூபா - 400 ரூபா மட்டும்
1000 ரூபா - 1000 ரூபா மட்டும்
தம்பி கொமினிகேசன்ஸ்
90, கந்தப்பசேகரம் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222040, 2222823
2222504

CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue,
Chundukuli, Jaffna.
Tel: 021 2223805
30 நாட்களுக்கான
புதிய பிரிவு ஆரம்பம்
Ms Office
DTP
Hardware
பதிவுக்கான இறுதி திகதி 20.06.2007
விரிவுரைகள் அனைத்தும் Multimedia மூலம் நடைபெறும்.
இப் புதிய பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவர்.
கூடிய செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
இப்பிரிவு 30 நாட்களில் நிறைவு பெறும்

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா போக்குவரத்துச் சபையின் பொறுப்பாளருமான வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் 15.06.2007 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை- செல்லாச்சி தம்பதியரின் மகனும் வேலுப்பிள்ளை- பூரணம் தம்பதியரின் மருமகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவ ரும் பிரகலாதன் (சிங்கப்பூர்), அஸ்வத்தாமன் (சுவிட்ஸர்லாந்து), இராகுலன் (TIENS, கொழும்பு), ஆராதனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி (சிங்கப்பூர்), பிரேமலதா (சுவிட்ஸர்லாந்து) ஆகியோரின் மாமனும் முத்துலிங்கம் அன்னலஷ்மி, விநாயக மூர்த்தி, காலஞ்சென்ற சின்னப்பிள்ளை மற்றும் நடராசா, மகேஸ்வரி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளையன் கராஜ் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
வே.நடராசா
(சகோதரன்).

## திருமதி கணேஸ்வரி தம்பிராஜா



*(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*

பாலன்வளவு, துர்க்காபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரம்படி லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேஸ்வரி தம்பிராஜா நேற்று (16.06.2007) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தம்பிராஜாவின் (முகாமையாளர், ஆனந் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சொர்க்கநாதர் மற்றும் பவளம் தம்பதியரின் அன்பு மகளும் தையிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்கா இல்லம்,
26/5, பிரம்படி லேன்,
கொக்குவில். (61741)

தகவல்:
வல்லிபுரம் தம்பிராஜா
*(கணவர்).*

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி
Belarus (பெலாரூஸ்), Poland(போலாந்து), Ukraine (உக்ரெய்ன்), Russia (ரஷ்யா) பிரபல பல்கலைக்கழகங்களில்
மருத்துவம் (MBBS, MD), பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல் கற்கைநெறிகள்
இலங்கைஅரசாங்கத்தினாலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் (WHO) ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் பிரபல்யமான உலக மற்றும் இலங்கை மாணவர்கள் அதிகம் படித்துக்கொண்டிருக்கும் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று ...
* A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்
* O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
* வங்கி நிலுவைகள்,தூதரக நேர்காணல் தேவையில்லை
* விண்ணப்பித்து 20 நாட்களுக்குள் பல்கலைக்கழகம் செல்லலாம்.
* 100% விசா உத்தரவாதம்.
* விடுமுறைகள், பயிற்சிப் பட்டறைகள் Seminar போன்றவற்றுக்கு Swiss, Italy, France, Germany போன்ற நாடுகளுக்கு செல்ல விசேட ஏற்பாடுகள்/அறிவுரைகள்
Spot Admission
* பெண்களுக்கு அதிக பாதுகாப்பு, விடுதி ஏற்பாடுகள் (தாய்/ தந்தை 2-3 மாதங்கள் மாணவியுடன் தங்கியிருக்கவும் விசேட ஏற்பாடுகள்)
* சக புதிய மாணவ,மாணவிகளுடன் குழுவாக பயணம்.
எமது நிறுவனத்தினூடாக செல்லும் மாணவர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகின்றோம்
* Passport, O/L, A/L இலங்கை அரசாங்க சான்றிதழ்களை உடனடியாகப் பெற ஏற்பாடுகள்
* யாழ் - கொழும்பு வருவதற்கான உடனடி ஏற்பாடுகள்
* கொழும்பு வந்து ஓரிரு நாட்களில் பயணம்
* ... கரன்சி,Travellers Cheque பெற உதவுதல்.
... பயண ஏற்பாடுகள்,விமான நிலையம் வரை எமது சேவை
Overseas Student Programme (Office of the Srilankan Coordinator)
இல.02 திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் தொலைபேசி: 0777-250555/ 021-2228247
இல. 01 முதலாம் குறுக்கு பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி மட்...
தொடர்புகளுக்கும் தகவல்களுக்கும்
Dr. M.Mylashan MBBS(SL) 0777 - 250555 / 0115669571.
குறிப்பு: தொலைபேசியில் முன் அனுமதி பெற்றே சந்திக்கவும். (பெற்றோருடன் வருதல் முக்கியம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.